**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**<u>O.S.No.407/2022</u>**

**வா.சா.1. ஷபீக்** 10.03.2023

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

நான் தற்போது எனது குடியிருப்பு ஒட்டன்சத்திரத்தில் உள்ளது. நான் கடந்த 1996 ஆம் ஆண்டு முதல் ஒட்டன்சத்திரத்தில் இருந்து வருகிறோம். 1996 ஆம் ஆண்டு முதல் நான், எனது பெற்றோர் மற்றும் எனது சகோதரி ஆகிய அனைவருமே ஒட்டன்சத்திரத்தில்தான் இருந்து வருகிறோம் . என்னிடம் காட்டப்படும் பிரமாண பத்திரிக்கை கடந்த மாதம் என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கையில் அயனாவரம் , சென்னை என்று முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . நான் ஏன் எனது பிரமாண பத்திரிக்கையில் எனது சொந்த முகவரியை கொடுக்கவில்லை என்றால் எனது ஆதார் எண் மற்றும் முகவரி சென்னையில் உள்ளதால் அந்த முகவரியை பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். நானும் எனது குடும்பத்தாரும் 30 ஆண்டுகளுக்கு முன்பாகவே சென்னையில் செட்டிலாகிவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. 16.02.2012 ஆம் தேதி பிரதிவாதியின் பெயரில் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட ஆவணம் எனது பாட்டி, எனது தகப்பனாருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம். அந்த செட்டில்மெண்ட் பத்திரம் எழுதும்போது எனது பாட்டி நல்லநிலைமையில்தான் இருந்தார். எனது பாட்டியின் உடல்நிலையும் நல்லநிலையில்தான் இருந்தது . அந்த செட்டில்மெண்ட் பத்திரம் எழுதியபோது நானும் , வாதிகளும் பத்தரப்பதிவு அலுவலகத்தில் இருந்தோமா என்றால் இல்லை , தோட்டத்தில் இருந்தோம் . அன்றையதினம் எனது பாட்டி , மற்றும் எனது தந்தை அவர்களது உடன்பிறந்தோருக்கிடையே எத்தனை பத்திரம் எழுதப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனது தகப்பனாருக்கு எழுதிய செட்ல்மெண்ட் பத்திரத்தை தவிர மற்ற பத்திரங்கள் பற்றி எனக்கு தெரியாது. 28.08.2012 ஆம் தேதி பிரதிவாதி நல்லமனநிலையில் இருந்தபோதுதான் செட்டில்மெண்ட் ரத்து பத்திரத்தை பதிந்து உள்ளார் என்றால் அதைபற்றி தெரியாது , ஆனால் அவர் நல்லமனநிலையில் இருந்தார். வா.சா.ஆ.8 ரத்து பத்திரத்தில் 16.02.2012 ஆம் தேதி எழுதி கொடுத்ததாக சொல்லப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் உனது ஒருவனுக்கே எழுதிக்கொடுக்க வேண்டுமென்று எந்த காலத்திலும்

எண்ணியதில்லை, எனது சொத்துக்களை பொறுத்து எனக்கு மனதில் தோன்றியபடி நல்லவிதமாக ஏற்பாடு செய்து வைக்க எண்ணியிருந்தேன் என்றும், மேற்படி செட்டில்மெண்ட் பத்தரம் பதிவு செய்யப்பட்ட விபரம் தற்போதுதான் தெரிய வந்த காரணத்தினாலும் இதில் கண்ட சொத்துக்களை சுவாதீனம் கொடுக்காமலும் , என் சுவாதீனத்திலே வைத்துள்ளதாலும், மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்துவிட்டேன் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது தவறு. எனது பாட்டி எங்களது அத்தைகளின் தூண்டுதலின்பேரில்தான் அதை ரத்து செய்துள்ளார். எங்களது அத்தைகளின் இருப்பிடம் சென்னை. எங்களது அத்தைகள் அனைவரும் சென்னையில்தான் இருக்கிறார்கள் , ஆனால் எங்கு செட்டிலாகி உள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. எங்கள் பராமரிப்பில் இருந்த பாட்டியை எங்களது அத்தைகளின் தூண்டுதலின்பேரில் மேற்படி ரத்து பத்திரம் எழுதிவைக்க வாய்ப்பில்லை என்றால் சரிதான் . (சாட்சி தற்போது மாற்றி அது தவறு என்று சாட்சியமளிக்கிறார்) ஒட்டன்சத்திரத்திலுள்ள சம்சுதீன் காலனிதான் எனது நிரந்தர முகவரி. அந்த காலகட்டத்தில் தாவா சொத்து எங்களது பராமரிப்பில் இருந்து வந்ததா என்றால் சரிதான் . 2020 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை பிரதிவாதி தங்கியிருந்தார் என்றால் 2020 லிருந்து வழக்கு தாக்கல் செய்யும் வரை எங்களுடன்தான் இருந்தார் . வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு எனது பாட்டி எனது அத்தை வீடான சென்னைக்கு சென்றுவிட்டார். 2019 ஆம் ஆண்டு வரை தாவா சொத்திற்கான பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் எனக்கு தெரியாது , ஆனால் எனது அப்பா பெயரில் இருந்தது. பட்டா மாறுதல் செய்த விண்ணப்பம் கொடுக்கும்போது வில்லங்க சான்றுடன் விண்ணப்பம் கொடுக்கப்பட்டதா என்றால் அந்த நடவடிக்கை எனது அப்பாவினால் செய்யப்பட்டது , அதனால் அதைபற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் ஆவணப்பட்டியலில் 19.10.2019–இல் தாவா சொத்திற்கான பட்டா மாறுதல் செய்யப்பட்டதாக குறிப்பாக குறிப்பிட்டு அதற்கான ஆவணமும் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான் .எனது தந்தையின் இறந்த தேதி 29.08.2019. எனது தந்தை இறந்து ஒன்னரை மாதங்கள் கழித்துதான் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளதாக எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் கண்டுள்ளது என்றால் தேதி இருக்கலாம் , நான் அதை சரியாக கவனிக்கவில்லை. நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கையில் பிரதிவாதி 31.01.2021 ஆம் தேதி தாவா சொத்தில் வந்து தகராறு செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . 2020 லிருந்து எனது பாட்டி சென்னையில் எனது அத்தையில் இருந்ததாக சொல்லியுள்ள நான் 31.01.2021 ஆம் தேதி பிரதிவாதியான எனது பாட்டி தாவா சொத்திற்கு வந்து

தகராறு செய்தார் என்று நான் பிராதில் சொல்லியுள்ளது உண்மையல்ல என்றும், அது கற்பனையானது என்று சொன்னால் சரியல்ல . எனது தகப்பனார் இறந்தபின்பு எனது தகப்பனாரின் மருத்துவ செலவிற்காக நான் பெற்ற கடனுக்கு பிரதிவாதியான எனது பாட்டி அவரது வங்கிக்கணக்கிலிருந்து இணையவழி பணபரிமாற்றத்தின் மூலம் எனது தகப்பனார் இல்லாத நிலையில் எனது தகப்பனார் மற்றும் பாட்டியின் கூட்டு வங்கி கணக்கிற்கு பணம் வந்தது . என்னிடம் காட்டப்படும் தானசெட்டில்மெண்ட் ஆவணம்தான் சென்னையில் உள்ள எனது தந்தை பெயரிலுள்ள சொத்தில் அவரது இறப்பிற்கு பின்னிட்டு எனது பாட்டி அவருக்கு கிடைத்த பங்கை எனதுபெயருக்கு 05.11.2020 ஆம் தேதி எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ம் பத்திரம் என்றால் சரிதான் . அது பி.வா.சா.ஆ.1. பிரதிவாதி எந்தகாலத்திலும் எனது தந்தையின் பராமரிப்பிலோ, அல்லது வாதிகளாகிய எங்களது பராமரிப்பிலோ இருந்ததில்லை என்றால் சரியல்ல . 16.02.2012 ஆம் தேதி பெறப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் பிரதிவாதியை ஏமாற்றி நம்பிக்கை மோசடி செய்து பெறப்பட்ட பத்திரம் என்று சொன்னால் சரியல்ல . ஏமாற்றி மோசடியாக பெறப்பட்ட பத்திரத்தை பிரதிவாதி தன்னிச்சையாக ரத்து செய்வதற்கு அதிகாரம் உண்டு என்று சொன்னால் இல்லை . தானசெட்டில்மெண்ட் ரத்து பத்திரத்திற்கு பின்னிட்டு எனது தகப்பனார் இறக்கும்வரை தாவா சொத்திற்கான பட்டா மற்றும் வருவாய் ஆவணங்கள் பிரதிவாதியான எனது பாட்டி பெயரில்தான் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. 2019 ஆம் ஆண்டு பெறப்பட்ட பட்டா செட்டில்மெண்ட் ரத்து ஆவணத்தை மறைத்து மோசடியாக பெறப்பட்டது என்றால் சரியல்ல . 2020 ஆம் ஆண்டு வரை தாவா சொத்தின் பராமரிப்பு, பிரதிவாதியின் நேரடி கட்டுப்பாட்டில் இருந்து வந்தது என்றால் சரியல்ல . 2020 ஆம் தேதி ஏற்பட்ட கொரோனா பெருந்தொற்றின்போது மத்திய அரசாங்கம் தெரிவித்த ஊரடங்கின்போது பிரதிவாதியான பாட்டி சென்னையில் இருந்ததை பயன்படுத்திக்கொண்டு வாதிகளாகிய நாங்கள் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்துகொண்டோம் என்றால் சரியல்ல . வாதிகளாகிய நாங்களும், எனது தந்தையும் பலகால கட்டங்களில் பிரதிவாதியை ஏமாற்றி மோசடி செய்து அவருடைய சொத்துக்களையும் நிதி ஆதாரங்களையும் எனது பெயருக்கு பரிவர்த்தனை செய்யப்பட்டது என்றால் சரியல்ல . எங்களது மோசடிகள் குறித்து பிரதிவாதியான எனது பாட்டி சென்னை ஓட்டேரி காவல்நிலையத்தில் புகார் கொடத்து அந்த புகாரின்பேரில் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்படாததால் நீதிமன்றத்தை அணுகி தனிப்புகார் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின்பேரில் முதல்தகவல்அறிக்கை எண் .977/2022 என்ற எண்ணில் என்னையும் ,

மற்ற வாதிகளையும் சேர்த்து முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான், ஆனால் அது பொய் வழக்கு. அதனால் நான் கோரியுள்ள தாவா சொத்தை பொறுத்த விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் செட்டில்மெண்ட் பத்திரத்தை இல்லாநிலையது என்ற விளம்புகை பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல . நான் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை நாடவில்லை என்றால் சரியல்ல . அதனால் நான் தாவாவில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

M DHANABAL Digitally signed by M DHANABAL Date: 2023.03.11 15:41:24 +0530

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்.